தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ரவி குமார் தியோடர், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (விரிவாக்கம்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 27-7-2012

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஆகஸ்ட் 2012 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்

ஆகஸ்ட் மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து இப்பல்கலைக்கழக பயிர்ப்பாதுகாப்பு மையத்தின் அறிக்கை பின்வருமாறு:

**நெல்**

தருமபுரி, திண்டுக்கல், திருநெல்வேலி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் சேலம் மாவட்டங்களில் நெல் பயிரில் இலைச் சுருட்டுப் புழு மற்றும் தண்டுப் புழு தாக்குதல் பரவலாக காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த வயல்களில் விளக்குப் பொறி அமைத்து (1 / ஏக்கர்) அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும்.

பூச்சிகளின் தாக்குதல் அதிகமாய் தென்பட்டால் வேப்பங் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது கீழ்க்காணும் ஏதாவது ஒரு மருந்தினை பாசலோன் 35 இசி 1500 மில்லி / எக்டர் அல்லது குனைல்பாஸ் 25 இசி 1000 மில்லி / எக்டர் அல்லது பாஸ்போமிடான் 40 எஸ்எல் 600 மில்லி / எக்டர் அல்லது பிரபினோபாஸ் 50 இசி 1000 மில்லி / எக்டர் தெளிக்கவும்.

தருமபுரி மாவட்டத்தில் இலைப்பேன் தாக்குதல் நெல் நாற்றங்காலில் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த பாஸ்போமிடான் 40 எஸ்.எல் 50 மில்லி அல்லது மோனோகுரோட்டோபாஸ் 36 எஸ்எல் 40 மில்லி 20 செனட் நாற்றங்காலில் தெளிக்கவும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பச்சை தத்துப் பூச்சியின் தாக்குதல் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த நெல் நடவு செய்த 15 மற்றும் 30 ஆம் நாளில் பின்வரும் ஏதாவது ஒரு மருந்தினைத் தெளிக்கவும். மோனோகுரோட்டோபாஸ் 36 எஸ்எல் 1000 மில்லி / எக்டர் அல்லது பாஸ்போமிடான் 40 எஸ்எல் 1000 மில்லி / எக்டர் அல்லது பென்தியான் 100 இசி 500 மில்லி / எக்டர் அல்லது புரபினோபாஸ் 50 இசி 1000 மில்லி / எக்டருக்குத் தெளிக்கவும்.

**பருத்தி**

திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களில் பருத்தியில் காய்ப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகளை ஏக்கருக்கு ஐந்து வைத்து தாய் ஆண் அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும். அதிகம் சேதம் உள்ள பயிர்களில் (1000 லிட்டர் தண்ணீர் / எக்டருக்கு) கீழ்க்காணும் ஏதாவது ஒரு மருந்தினை பாசலோன் 35 இசி 2.5 லிட்டர் / எக்டர் அல்லது குனைல்பாஸ் 25 இசி 2 லிட்டர் / எக்டர் அல்லது கார்பரில் 50 WP 2.5 கிலோ / எக்டர் அல்லது குளோர்பயிரிபாஸ் 20 இசி 2.0 லிட்டர் / எக்டருக்குத் தெளிக்கவும்.

சேலம் மாவட்டத்தில் பருத்தியில் வெள்ளை ஈயின் தாக்குதல் காணப்படுகின்றது. இதைக் கட்டுப்படுத்த தாவரப் பூச்சிகொல்லி மருந்தினைத் தனியாகவோ அல்லது இரசாயன மருந்துகளோடு கலந்து தெளிக்கவும்.

வேப்பங் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது வேப்ப எண்ணை 3 மில்லி / ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது மீன் எண்ணை சோப் 25 கிலோ (1 கிலோ 40 லிட்டர் தண்ணீருக்கு) அல்லது நொச்சி இலைச்சாறு 5 சதம் அல்லது கீழ்க்காணும் ஏதாவது ஒரு மருந்தினைத் தெளிக்கவும்.

**(i) இளம் பருவத்தில் - (500 லிட்டர் தண்ணீர் / எக்டருக்கு)**

மீதைல்டெமட்டான் 25 இசி 500 மில்லி / எக்டருக்கு அல்லது பாஸ்போமிடான் 40 எஸ்எல் 600 மில்லி / எக்டருக்கு.

**(ii) மத்திய மற்றும் வளர்ந்த பருவத்தில் (1000 லிட்டர் தண்ணீர் / எக்டருக்கு)**

பாசலோன் 35 இசி 2.5 லிட்டர் / எக்டர் அல்லது மோனோகுரோட்டோபாஸ் 36 எஸ் எல் / எக்டர் அல்லது ட்ரைஅசோபாஸ் 40 இசி 2 லிட்டர் / எக்டருக்கு அல்லது அசிபேட் 75 எஸ்பி 1.5 கிலோ / எக்டருக்கு.

**நிலக்கடலை**

தர்மபுரி, திருநெல்வேலி, திருவண்ணமாலை, புதுக்கோட்டை மற்றும் சேலம் மாவட்டங்களில் நிலக்கடலையில் இலைச்சுருட்டு புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஒரு விளக்கு பொறி வைத்து அந்திப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும். தேவைப்படின் பின்வரும் ஏதாவது ஒரு மருந்தினைத் தெளிக்கவும்: டைகுளோர்வாஸ் 75 WSC 625 மில்லி / எக்டர் அல்லது மோனோகுரோட்டோபாஸ் 36 WSC 750 மில்லி / எக்டர் அல்லது குளோர்பயிரிபாஸ் 20 இசி 1250 மில்லி / எக்டர் அல்லது பாசலோன் 35 இசி 750 மில்லி / எக்டர்.

**பப்பாளி மாவுப் பூச்சி**

மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி பயிர்களில் மாவுப்பூச்சியின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும். தேவைப்படின் ஒட்டுண்ணிகளை அருகில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்லூரி / ஆராய்ச்சி நிலையம் / வேளாண் விரிவாக்க மையத்திலிருந்து இருந்து இலவசமாக பெற்று பயிர்களில் விட்டு மாவுப் பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

மேலும், விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வேளாண் பூச்சியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611214

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயிர் நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611226

மக்கள் தொடர்பு அலுவலர்